முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# AA2 பரீட்சை – 2016 சனவரி

# (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2016 – 01 - 30
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
  *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  (3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*
  (5) ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** முதல் **1.7** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடைகளின் இலக்கத்தை அவ்வினா வுக்குரிய இலக்கத்துடன் உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் ஒரு உறுப்பு (component) **அல்லாதது** எது?

(1) சர்வதேச கட்டுறுத்துக்களும் (treaties) உடன்படிக்கைகளும்

(2) சனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள்

(3) வியாபாரப் பிணக்குத் தீர்மானம் (Business dispute resolution)

(4) பொதுமக்கள் பாதுகாப்பு (02 புள்ளிகள்)

**1.2** இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் (Supreme Court) ஒரு அதிகாரப் பரப்பு (area of power) **அல்லாதது** பின்வருபவைகளுள் எது?

(1) ஆலோசனை நியாயாதிக்கம் (Consultative Jurisdiction)

(2) பாராளுமன்றத் தேர்தல்கள்

(3) அடிப்படை உரிமைகள் மீதான நியாயாதிக்கம் (Jurisdiction on Fundamental Rights)

(4) அரசியலமைப்பு நியாயாதிக்கம் (Constitutional Jurisdiction) (02 புள்ளிகள்)

**1.3** 'முகவர்' என்பதற்கு ஒரு உதாரணம் **அல்லாதவர்** பின்வருபவர்களுள் யார்?

(1) சட்டத்தரணி (Attorney-at-law) (குடியியல் வழக்கொன்றில்)

(2) கம்பனிக் கூட்டத்திற்கு சமூகமளிக்க பதிலாள் பத்திரம் (Proxy holder) வைத்திருப்பவர்

(3) விசேட அட்டோனித் தத்துவத்தை வைத்திருப்பவர்

(4) ஒரு ஊழியர் (An employee) (02 புள்ளிகள்)

**1.4** பின்வருவனவற்றுள் கைமாற்றத்தக்க கருவிக்கான உதாரணம் **அல்லாதது** எது?

(1) காசோலை (2) நிலையான வைப்புச் சான்றிதழ்

(3) வங்கி வரைவு (bank draft) (4) மாற்றுண்டியல் (02 புள்ளிகள்)

**1.5** பொதுமக்களின் நன்மைகருதி செயல்பட ஏதுவாக தொழில்சார் விழுமியங்களில் (Professional ethics) ஒரு அடிப்படைக் கோட்பாடாகக் கருதப்படக் கூடியது பின்வருபவைகளுள் எது?

(1) நேர்மை (Honesty) (2) ஒருமைப்பாடு (Integrity)

(3) நியாயம் (Fairness) (4) இரக்கம் (Kindness) (02 புள்ளிகள்)

**1.6** ஒப்பந்தமொன்றிற்கு ஒப்பந்தம் செய்வதற்கான தகைமை (Contractual capacity to a contract) தொடர்பான சரியான கூற்று பின்வருபவைகளுள் எது?

(1) நன்மை பயக்கக்கூடிய சேவைகளுக்கான ஒப்பந்தங்கள் பராயமடையாதோரைக் கட்டுப்படுத்தும்

(2) சித்த சுவாதீனமற்றவரை ஒரு தரப்பாகக் கொண்ட ஒப்பந்தங்கள் வெற்றும் வறிதுமானதாகக் (Null and void) கருதப்படும்.

(3) மதுபோதையிலான (Intoxication) ஒப்பந்தமொன்றை ஆற்றலிழக்கச் செய்யலாம்.

(4) மேலே உள்ள யாவும். (02 புள்ளிகள்)

**1.7** மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளபடி உண்டியலொன்றை வைத்திருப்பவர், உரிய காலத்தில் கொள்ளுநராக மாறுவதற்கான (to become a holder-in-due course) ஒரு தேவைப்பாடு **அல்லாதது** பின்வருபவைகளுள் எது?

(1) உண்டியலானது ஒரு சட்டரீதியான உரிமையாளரிடமிருந்து எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) உண்டியலானது, முகத்தோற்றத்தில் பூர்த்தியானதாகவும் ஒழுங்குடையதாகவும் இருக்க வேண்டும்.

(3) வைத்திருப்பவர் தான் உண்டியலுக்கான பெறுமதியைக் கொடுத்திருத்தல் வேண்டும்.

(4) வைத்திருப்பவர் உண்டியல் காலங்கடந்தாகுமுன்னர்(overdue) அதனை எடுத்திருத்தல் வேண்டும். (02 புள்ளிகள்)

*வினா இல. **1.8** முதல் **1.10** வரையானவற்றிற்கு சுருக்க விடைகளை உங்களது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.8** இலங்கைச் சட்ட முறைமையின் கீழ் வருகின்ற இரண்டு (02) சட்டங்களைக் **கூறுக.** (02 புள்ளிகள்)

**1.9** இலங்கையிலுள்ள சட்ட மூலங்கள் இரண்டைக் (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

**1.10** ஒழுக்க விழுமியங்களுக்கான (ethics) இரண்டு (02) பிரதான அணுகுமுறைகளைக் (approaches) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

# <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

**சில்வா** இரண்டு வீடுகளுக்குச் சொந்தக்காரர். ஒரு வீடு 2 படுக்கையறைகளையும் மற்ற வீடு 3 படுக்கையறைகளையும் கொண்டுள்ளன. **சில்வா** தனது 2 படுக்கையறை வீட்டை **சில்வாவின்** இரண்டு வீடுகளையும் பற்றி நன்கறிந்த **டயஸ்** என்பவருக்கு விற்க கொடைமுனைவு (Offered) செய்கிறார். **டயஸ்** தனக்கு மூன்று படுக்கையறை வீடு கொடைமுனைவு செய்யப்பட்டதாக புரிந்துகொண்டு அதனை ஏற்றுக் கொள்கிறார்.

**சில்வாவுக்கும் டயஸுக்குமிடையே** ஒரு செல்லுபடியான ஒப்பந்தம் உள்ளதாவென்பதை **விபரிக்குக**.

(05 புள்ளிகள்)

## வினா 03

காசோலை என்பது ‘‘கோரும்போது வங்கியாளர் ஒருவரால் செலுத்தத்தக்கதாக வரையப்படும் ஒரு மாற்றுண்டியல்’’ என மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், காசோலை மற்றும் மாற்றுண்டியல் ஆகியவற்றுக்கிடையே அடிப்படை வேறுபாடுகள் காணப்படுகின்றன.

காசோலை ஒன்றிற்கும் மாற்றுண்டியல் ஒன்றிற்குமிடையிலான ஐந்து (05) வேறுபாடுகளைக் **கூறுக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

“முதல்வர் மற்றும் முகவருக்கிடையே காணப்படும் உறவே முகவராண்மை (Agency) எனப்படுகிறது. முதல்வர் – முகவர் உறவானது பல்வேறு வழிகளால் ஏற்படுகின்றது.”

முதல்வர் – முகவர் உறவு உருவாகும் ஐந்து (05) வழிமுறைகளைக் **கூறுக.** (05 புள்ளிகள்)

## வினா 05

CIF ஒப்பந்தங்கள், சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படுகின்ற மிகவும் பிரபல்யமான ஒப்பந்த வகைகளுள் ஒன்றாகும். இவ்வகை ஒப்பந்தங்களில், ஒப்பந்தமானது கொள்வனவாளனுக்கு (buyer) பொருட்களை விநியோகிப்பதனால் அல்லாது கப்பல் போக்குவரத்து ஆவணங்களை கொள்வனவாளனுக்கு விநியோகிப் பதன் மூலமாக விற்பனையாளனால் ஆற்றப்படுகின்றது (performed by the seller).

(a) அத்தகைய கப்பற் போக்குவரத்து ஆவணங்களுள் மூன்றினை (03)க் **கூறுக.**

(b) மேலே பெயரிடப்பட்ட ஏதாவது ஒரு கப்பற் போக்குவரத்து ஆவணத்தின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

**மெற்றில்டா த சில்வா** கடந்த ஐந்து வருடங்களாக ஒரு தொழில்சார் சிகை அலங்கரிப்பாளராக தொழில் செய்து வருகின்றார். தற்போது அவருடைய வியாபாரமானது இலங்கையில் பிரபலமாகியிருப்பதோடு அவர் சில கிளைகளை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வைத்திருக்க எண்ணுகிறார்.

**மெற்றில்டா டி சில்வா,** 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச்சொத்துச் சட்டத்தின் கீழ் தனது பெயரான ''மெற்றில்டா த சில்வா'' என்பதை ஒரு வர்த்தக நாமமாகப் (Trade mark) பதிவு செய்துகொள்ள முடியுமா என்பதைக் காரணங்களுடன் **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

26 வயதுடைய திருமணமாகாத இளம்பெண் **செவ்வந்தி** இலங்கையிலுள்ள ஒரு முன்னணி நிதி நிறுவனத்தில் ஒரு கணக்காளராகப் பணி புரிகின்றார். அவர் 2014 ஆம் ஆண்டு அந்தக் கம்பனியில் இணைந்திருந்தார்.

(a) கடை மற்றும் காரியாலய ஊழியர் சட்டத்திற்கிணங்க, **செவ்வந்தியின்** ஊதியத்திலிருந்தான (remuneration) அதிகாரமளிக்கப்பட்ட கழிவுகள் (authorized deduction) நான்கினைக் (04) **குறிப்பிடுக**. (04 புள்ளிகள்)

(b) பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் கீழும் **செவ்வந்திக்குப்** பொருத்தமான விடுமுறை உரித்துக் களை (Leave entitlements) **விபரிக்குக**.

   (i) **செவ்வந்தி** சுகவீனமுற்று இரண்டு (02) நாட்கள் வீட்டில் இருக்கிறார்.

   (ii) **செவ்வந்தி** திருமணம் செய்யவிருப்பதால் தனது திருமணத்திற்காக 10 நாட்கள் விடுமுறை யைக் கோருகின்றார்.

   (iii) **செவ்வந்தி** கர்ப்பமுற்று தனது முதலாவது குழந்தையின் பிரசவத்திற்காகக் காத்திருக்கின்றார். (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

(a) மூன்று ஆண்டுகளின் முடிவில் மோட்டார் வாகனத்தை மீள் கொள்வனவு (repurchase) செய்வதென்ற விருப்பத் தெரிவுடன் (option), **அனில்** என்பவர், **ABC நிதிக் கம்பனியிடமிருந்து** 03 ஆண்டுகளுக்கு ஒரு மோட்டார் வாகனத்தை வாடகைக்குப் பெறுகிறார். **அனில்,** இது ஒரு பொருள் விற்பனை ஒப்பந்தமென்றும் தானே அந்த மோட்டார் வாகனத்தின் உரிமையாளர் என்றும் நம்புகின்றார்.

இந்தக் கொடுக்கல் வாங்கல் (transaction), பொருட்கள் விற்பனை ஒழுங்குச் சட்டத்தினால் (Ordinance) ஆளப்படுகின்றதா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு முன்னணிக் காப்புறுதிக் கம்பனியான **AR காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** ஆயுள் காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக **மிஹிரன்** என்பவர் விண்ணப்பித்துள்ளார். வேறு காப்புறுதிக் கம்பனிகளில் வேறு ஏதாவது ஆயுள் காப்புறுதிகளை அவர் கொண்டிருக்கிறாரா என்பது பற்றி **AR காப்புறுதிக் கம்பனியால்** அவரிடம் வினவப்பட்டது. வேறு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து ஆயுள் காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்ள அவர் விண்ணப்பித்திருந்த போதிலும் அவை நிராகரிக்கப் பட்டிருந்த விடயத்தை வெளிப்படுத்தவில்லை. அத்துடன் அவர் **AR காப்புறுதிக் கம்பனிக்கு** தனது பாதகமான உடல்நிலை பற்றியும் வெளிப்படுத்தவில்லை. **மிஹிரனின்** கருத்துக்களின் மீது **AR காப்புறுதிக் கம்பனியானது மிஹிரனுக்கு** ஆயுள் காப்புறுதி ஒன்றினை வழங்கியது. இவ்வாயுள் காப்புறுதி வழங்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் **மிஹிரன்** இறந்து விட்டார். இப்போது **மிஹிரனுடைய** மனைவி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

**மிஹிரனின்** மனைவி இழப்பீட்டைப் பெறுவதற்கான உரிமைக்கோரிக்கையை விடுப்பதற்கு உரித்துடையவரா என **விவரிக்குக**. (06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

**ஆன்,** அவரது மகள் **ரோஷினி** மற்றும் அவரது மருமகன் **ஜிஹான்** ஆகியோர், ஒரு வெற்றிகரமான ஆடைத்தொழிற்சாலை வியாபாரத்தின் பங்காளர்கள் ஆவர். அவர்கள் இந்த வியாபாரத்தை 10 வருடங்களாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். **ஆனுக்கு** தற்போது 65 வயதாவதுடன் **ரோஷினி** அவருடைய முதலாவது பிள்ளைப்பேறுக்காகக் காத்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய வியாபாரத்தை விரிவாக்க வேண்டியுள்ளபோதிலும் அவர்களில் எவரும் ஏதாவது இடரையோ அல்லது மேலதிக பொறுப்புக்களையோ ஏற்பதற்குத் தயாராக இல்லை. அவர்கள் தமது வியாபாரத்தை ஒரு கம்பனியாக மாற்றுகின்ற செயன்முறையை கவனத்திற் கொண்டுள்ளதுடன், பங்குடமையினை **பரிப்பு வரையறுக்கப்பட்ட (தனி) கம்பனியாக** (private limited liability company) மாற்றுவதிலுள்ள அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் மீதான உங்களது ஆலோசனையை எதிர்பார்க்கின்றனர்.

ஒரு **பரிப்பு வரையறுக்கப்பட்ட (தனி) கம்பனியுடன்** ஒப்பிடுகையில் பங்குடமை ஒன்றின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களை **விபரிக்குக.**

(10 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

## <u>பகுதி D</u>

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா 10**

(a) **அமல்**, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர், தான் ஒரு கணக்காளராக ஆகும்பொருட்டு தொழில்சார் கணக்கீட்டு நிறுவனமொன்றில் பதிவினை மேற்கொண்டு தனியார் நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் வகுப்புகளுக்குச் செல்கின்றான். அவனுடைய விரிவுரையாளர் குறிப்பிட்ட செயற்பாடுகளுடன்கூடிய திட்டமிடப்பட முடியாத விஞ்ஞானமுறைக் கணிப்பான்களை வாங்குமாறு சகல மாணவர்களிடமும் கூறியிருந்தார். **அமல், ''பொத் சப்புவ''** என்ற பிரபல்யமான ஒரு புத்தகக் கடையில் அத்தகைய ஒரு கணிப்பானை வாங்குவதற்காகச் சென்றிருந்தான். **அமல்,** கணிப்பானை வாங்குவதற்காக, தனது தேவைப்பாடுகளை ''பொத் சப்புவ'' புத்தகக் கடையின் விற்பனை அலுவலரிடம் விளங்கப்படுத்தியதுடன் கணிப்பானைத் தீர்மானிப்பது தொடர்பில் அந்த அலுவலரின் தீர்மானத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தான். அவன் வகுப்பிற்கு கணிப்பானை எடுத்துச் சென்றிருந்தபோது இந்தக் கணிப் பானில் தேவையான செயற்பாடுகளைச் செய்வதற்குரிய வசதி காணப்படாததால் இது மாணவர்களுக்குப் போதுமானதாக இல்லை என அவனது விரிவுரையாளர் தெரிவித்தார். **அமல்** இந்தக் கணிப்பானை **''பொத் சப்புவ''** புத்தகக் கடைக்கு மீளளித்து அதற்கான பணத்தை மீளப் பெறவேண்டியுள்ளது.

**அமல்** தனது பணத்தை மீளப் பெறுவதற்கான தகுதிநிலை குறித்து **ஆராய்க.** (13 marks)

(b) **A** என்பவர் 'ரிதீதிர சினிமா' எனும் திரையரங்கிற்கு புதிதாக வெளியிடப்பட்டதொரு சண்டைப் படமொன்றைப் பார்ப்பதற்குச் சென்றார். திரைப்படம் ஆரம்பமாவதற்கு முன்னர், காண்பிக்கப்படுகின்ற அறிவித்தல்கள் மற்றும் விளம்பரங்களின்போது, ''இந்தத் திரையரங்கம் பழுதுபார்க்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் தளபாடங்களும் பொருத்துக்களும் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே கலரியிலுள்ள பார்வையாளர்களில் எவருக்கேனும் ஏதேனும் காயமேற்படின் அதற்குத் திரையரங்க முகாமையானது பொறுப்பல்ல'' என்று குறிப்பிடப்படுகிற ஒரு அறிவித்தல் காண்பிக்கப்பட்டது. சண்டைப் படங்களின் தீவிர இரசிகனான **A** திரையில் காட்டப்பட்ட இவ்வறிவித்தலை அலட்சியப் படுத்தியதோடு திரைப்படத்தைப் பார்க்க மனக் கிளர்ச்சியிடன் காத்திருந்தான். திரைப்படம் ஆரம்பிக்கப் பட்டதும் உட்கார்ந்துகொண்டே துணிகர சண்டைகளை செய்து பார்க்க முயற்சித்தான். கதிரை மீதிருந்து செய்த அவனது அசைவுகளின் காரணமாக கதிரை உடைந்து முறிய **A** முதுகுப்புறப் பகுதியில் கடும் காயத்திற்குள்ளாகி, அருகாமையிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டான்.

**A** தனது வைத்தியச் செலவுக்கான பற்றுச்சீட்டுக்களை ''ரிதீதிர சினிமா'' முகாமை தீர்க்க வேண்டுமென உரிமை கோரினான்.

''ரிதீதிர சினிமா'' முகாமையிடமிருந்து அத்தகைய வைத்திய செலவுகளுக்கு உரிமைகோர **A** இற்கு சட்டரீதியான உரித்து உள்ளதாவென்பதை **ஆராய்க**. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D யின் முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |